


நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி சென்னிமலை ஒன்றியத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கு முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி நன்றி தெரிவித்தார். நிகழ்வில் சென்னிமலை ஒன்றிய செயலாளர் ப.செங்கோட்டையன், டி.எஸ்.குமாரசாமி, காயத்ரி இளங்கோ, இளங்கோ உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 14/05/2026 தேதிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மற்றும் 16/05/2026 தேதிய கள ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆகியவற்றில் வகுக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் மற்றும் கழக மகளிர் அணி இணையதள செயலாளர் டாக்டர். யாழினி ஆகியோர் ஆய்வுப்பணி மேற்கொள்ள உள்ள திருநெல்வேலி (மத்திய), திருநெல்வேலி (மேற்கு), திருநெல்வேலி (கிழக்கு), கன்னியாகுமரி (மேற்கு), மற்றும் கன்னியாகுமரி (கிழக்கு) ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் ஆலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி கீழ்க்கண்ட அட்டவணைகளின்படி ஆய்வுப்பணிகள் நடைபெற உள்ளன.

**நெல்லை மாவட்ட கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:**

1. 19/05/2026 செவ்வாய்க்கிழமை பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி
2. 20/05/2026 புதன்கிழமை நெல்லை சட்டமன்றத் தொகுதி
3. 21/05/2026 வியாழன் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி
4. 22/05/2026 வெள்ளி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி
5. 23/05/2026 சனிக்கிழமை இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி
6. 26/05/2026 செவ்வாய்க்கிழமை நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி

**குமரி மாவட்ட கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:**

1. 27/05/2026 புதன்கிழமை பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி
2. 28/05/2026 வியாழன் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி
3. 29/05/2026 வெள்ளி கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி
4. 30/05/2026 சனிக்கிழமை கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி
5. 31/05/2026 ஞாயிறு குளச்சல் சட்டமன்றத் தொகுதி
6. 01/06/2026 திங்கள் நாகர்கோயில் சட்டமன்றத் தொகுதி

**காலை: 9.30**

மாவட்டச் செயலாளர், மாவட்ட நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026 சட்டமன்ற தேர்தல் வேட்பாளர்கள், தலைமைக்கழக பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் பாகநிலை முகவர்கள் (BLA 2) பங்கேற்றிட வேண்டும்.

குறிப்பு: தற்போது பொறுப்பில் இல்லாத மூத்த கழக முன்னோடிகளையும் கண்டிப்பாக பங்கேற்றிடச் செய்திட வேண்டும்.

**மாலை: 4.00 மணி**

கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பங்கேற்றிட வேண்டும்.

கூட்டத்தில் கைபேசிகள் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிகழ்ச்சிகளை பொருத்தமான இடங்களில் ஏற்பாடு செய்திடுவதோடு, சம்பந்தப்பட்ட அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள செய்ய வேண்டுமாய் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் கழக நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள் தங்களது கருத்துகளை வாய்மொழியாக கூறுவதோடு, எழுத்துப் பூர்வமாகவும் அளிக்கலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 17.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.




கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட கோவை மாநகர மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் பி.என்.புதூர், வேலாண்டிபாளையம், வெங்கிடாபுரம், சாய் பாபா குடியிருப்பு பகுதிகளில் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் பகுதி கழக பொறுப்பாளர்கள் கிருஷ்ணராஜ், கே.எம்.ரவி, மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட மாவட்ட, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தியாகி குமரன் வீதி மற்றும் தேவாங்க பேட்டை பகுதியில் வீதி வீதியாகச் சென்று தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் தெப்பக்குளம் பகுதி கழக பொறுப்பாளர் கண்ணன், மாமன்ற உறுப்பினர் ஷர்மிளா, பகுதி அமைப்பாளர் பாலாஜி விக்னேஷ், வார்டு செயலாளர்கள் சுரேஷ், மோகன்ராஜ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற மாநிலமாக தி.மு.க. மாற்றியுள்ளது!

# த.வெ.க. தமிழ்நாட்டை பின்னோக்கி எடுத்துச் செல்லாமல் இருந்தாலே போதும்!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேட்டி!



கோவை,மே.19–

தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற மாநிலமாக கழகத் தலைவர், என்நாளும் எங்களின் முதல்வராக விளங்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு மாற்றியுள்ளது. இதை த.வெ.க. தக்க வைத்தாலே போதுமானது. தமிழ்நாட்டை பின்னோக்கி எடுத்து செல்லாமல் இருந்தாலே போதும் என்று கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறினார்.

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டிட்டு வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கோவை தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டை மேடு பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். அப்பொழுது செய்தியாளர்களிடம் கூறியதாவது :

நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடக் கூடிய வாய்ப்பை கழகத் தலைவர் தளபதி அவர்கள் வழங்கினார்கள், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசியோடு கோவை தெற்கு தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு போட்டியிட்டு மகத்தான வெற்றி வாய்ப்பை கோவை தெற்கு தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள் வழங்கியிருக்கின்றார்கள். வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற கடமை உணர்வோடு திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் அனைவரையும் ஒன்றிணைத்து நன்றி தெரிவிக்கும் பணிகளை தொகுதி முழுவதும் செய்து வருகின்றோம். ஒவ்வொரு பகுதிகளாக சென்று வாக்காளர்களை சந்தித்து, வாக்களித்த மக்களுக்கு எங்களின் அர்ப்பணித்த உணர்வோடு நன்றிகளை சமர்ப்பித்து வருகின்றோம். கோவையில் உள்ள 10 தொகுதிகளில் 3 தொகுதிகளை திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வாக்காள பெருமக்கள் வழங்கி இருக்கின்றார்கள். வருகின்ற காலங்களில் முழுவதுமான வெற்றிக்கு நாங்கள் அயராது உழைப்போம் என்ற உறுதியோடு இந்த நன்றி அறிவிப்பை நாங்கள் மக்களை சந்தித்து நன்றிகளை தெரிவித்து வருகின்றோம்.

**கேள்வி:** த.வெ.க. பதவி ஏற்றதில் இருந்து இந்த அரசின் செயல்பாடு எப்படி உள்ளது?

**பதில்** : ஒரு வார காலமாக சமூக வலைதளங்களில் வரக்கூடிய கருத்துக்களை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். இப்படிப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன, அவர்களுக்கு வாக்களித்தவர் எல்லாம் எப்படிப்பட்ட கருத்துக்களை முன்மொழிந்து வருகிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வார காலம் ஆகிருகின்றது, இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருந்து பார்ப்போம், இந்த அரசு எப்படி செல்கின்றது, மக்களுக்கான திட்டங்களை எப்படி கொண்டு சேர்க்கின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி** : குதிரை பேரம் நடைபெறுகிறது என்ற வார்த்தையை தொடர்ச்சியாக பார்க்க முடிகிறது, இது குறித்த கேள்விக்கு?

**பதில்** : சட்டமன்றத்திலே அ.தி.மு.க என்ற ஒரு இயக்கம் இரண்டாக பிளவு பட்டு ஒரு அணி ஆளுங்கட்சி ஆதரவாக செயல்பட கூடிய ஒரு சூழலை அங்கு பார்த்தோம். சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சியினுடைய தலைவர் பெருமக்கள் இது குறித்த கருத்துக்களை முன்மொழிந்தி ருக்கிறார்கள். நீங்களும் அதைப் பார்ப்பீர்கள், பொது மக்களும் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் இந்த அரசு எப்படி செல்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். எங்களுடைய சட்டமன்ற எதிர் கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது ஆற்றிய உரையில் மிகத் தெளிவாக அவர்கள் தேர்தல் நேரத்தில் என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தார்களோ அதை எல்லாம் பட்டியலிட்டு இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் அதற்கு காலமாக அவகாசம் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள், ரொம்ப நாள் எடுத்துக்காதீர்கள் செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள் நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி** : எஸ்.பி.வேலுமணி சட்டப்பேரவை வளாகத்தில் செந்தில் பாலாஜியோடு என்ன உரையாடினார் என்று அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை கொடுத்திருந்தார்?

**பதில்** : முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி என்னிடம் அரசியல் சம்பந்தமாக எதுவும் பேசவில்லை. கையெழுத்து போடும் இடத்தில் எதார்த்தமாக சந்தித்து பேசியது தான். அரசியல் தொடர்பாக அவர்களிடம் பேச வேண்டிய அவசியம் இல்லை,

**கேள்வி** : டாஸ்மாக் கடைகள் குறைத்து இருக்கிறார்கள் இது பற்றி?

**பதில்** : ஊடகங்கள், பத்திரிக்கைகள், சமூக வலைதளங்கள் வந்து ஏதோ இப்பொழுது தான் டாஸ்மார்க் கடைகளை குறைக்கப்பட்டது போல இந்த அரசு அமைந்த உடன் குறைக்கப்பட்டதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்குவதை முழுமையாக இந்த ஒரு வார காலம் நான் பார்த்தேன். தயவு செய்து தொலைக் காட்சிகளாக இருக்கட்டும், பத்திரிகைகளாக இருக்கட்டும் மக்களுக்கு சொல்ல வேண்டிய கடமை இருக்கு, குறிப்பாக கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு 500 டாஸ்மாக் கடைகளை நாங்கள் குறைத்தோம். அதற்கு முன்பாக அ.தி.மு.க. ஆட்சியிலும் டாஸ்மாக் கடைகள் குறைக்கப்பட்டன. ஏதோ இப்பொழுதுதான் புதிதாக இந்த அரசு அமைந்த உடன் 717 டாஸ்மாக் கடைகள் பூட்டப்பட்டதைப் போல சில செய்திகள், சில சமூக வலைத்தளங்கள், சில ஊடகங்கள் இது போன்ற செய்திகளை வெளியிடுவதை பார்க்கும் பொழுது ஒரு பொறுப்புணர்வோடு, கடமைவுணர்வோடு கடந்த காலங்களில் என்னவெல்லாம் இருந்தது, இப்பொழுது என்ன செய்து இருக்கிறார்கள் என்பதை செய்தியாக போடும்போது அதையும் சேர்த்து போட்டால் நன்றாக இருக்கும். புதிதாக இப்பொழுதுதான் அந்த கடையில் மூடப்பட்டதை போல, மற்ற காலங்களில் இல்லாதது போல இப்பொழுது பூரண மதுவிலக்கை கொண்டு வந்ததைப் போல தோற்றத்தை உருவாக்கக்கூடிய நிலை உள்ளது. இது காலப்போக்கில் தெரியும், ஆகையால் தான் நாங்கள் சொன்னோம் இது ஒரு ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல், ரியல் ஆட்சியாக இருக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தாக உள்ளது அதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி** : இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் மக்கள் அதிக இடங்களை கொடுக்கவில்லை மக்கள் எப்படி வாக்களித்து உள்ளார்கள்? உண்மையான மாற்றத்தை எதிர்பார்க்கிறார்களா?

**பதில்** : உண்மையான மாற்றத்தை நீங்கள் கடந்த ஒரு வாரமாக பார்க்கிறீர்கள், என்னெல்லாம் மாற்றங்கள் நடந்து இருக்கு, இதிலே உண்மையான மாற்றங்கள் என்ன நடக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்கணும், என்னைப் பொருத்தவரை நான் உங்களிடம் கேட்கக்கூடிய ஒரே ஒரு கேள்வி, மாற்றம் என்றால் என்ன? இந்தியாவில் தொழில் துறையில் தமிழ்நாடு நம்பர் 1, அதில் நீங்க என்ன மாற்றங்கள் கொண்டு வரப் போகிறீர்கள், உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு நம்பர் 1, அதில் என்ன மாற்றங்களை நீங்கள் கொண்டு வர போறீங்க?, மருத்துவத்தில் இந்தியாவில் தமிழ்நாடு நம்பர் 1, அதில் என்ன மாற்றங்களை நீங்கள் கொண்டு வரப்போறீங்க?, பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவில் தமிழ்நாடு இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது, அதில் என்ன மாற்றத்தை கொண்டு வரப்போறீங்க? ஆக பொதுவாக மாற்றம் என்று சொன்னால் ஒரு கொள்கை ரீதியான முடிவு இருக்கணும், நாங்க வந்து கல்வியில் இந்த மாற்றங்களை செய்யப்போகிறோம், நாங்க மருத்துவத்தில் இந்த மாற்றங்களை செய்யப் போறோம், தொழில்துறையில் இந்த மாற்றங்களை செய்ய போறோம் என்றெல்லாம் அவர்கள் தேர்தலுக்கு முன்பாக எதையும் சொல்லவில்லை, இதையெல்லாம் நாங்கள் செய்வோம் என்ற வாக்குறுதிகளையும் அவர்கள் கொடுக்கவில்லை, பொதுவாக சமூக வலைதளங்கள், சில பத்திரிகைகள், சில தொலைக்காட்சிகள் தான் சில நேரங்களில் மாற்றம், மாற்றம் என்று சொல்கிறார்கள்,

எந்தவிதமான மாற்றங்கள் என்று சொன்னால் தான் சரியான கருத்துக்களை சொல்ல முடியும், ஆக ஒரு வளர்ச்சி பெற்ற மாநிலமாக இந்தியாவிலேயே முதல் மாநிலமாக எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டை வழி நடத்தி இருக்கின்றார்கள், இதை தக்க வைத்தாலே போதுமானது, இதற்கு மேலே அவர்களுடைய சக்திகள் அதிகமாக இருந்து இந்த நிலையை விட அடுத்த நிலைக்கு அழைத்துச் சென்றாள் பாராட்டுக்குரியது, இதிலிருந்து தமிழ்நாடு பின்னோக்கி செல்லாமல் இந்த நிலையை பாதுகாத்து எடுத்துச் சென்றால் இதுவே மக்களுக்கு பல்வேறு நிலைகளில் ஒரு உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லக் கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கும், எதுவாக இருந்தாலும் பொறுத்து இருந்து பார்போம் என்று செய்தியாளர்களிடம் கூறினார்

இதில் மாநகர் மாவட்ட கழக செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.முருகன், பகுதி கழக பொறுப்பாளர் பக்ருதீன் உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பலர் கலந்து கொண்டனர்.



தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட என்.ஆர்.கார்த்திகேயன் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் குனியமுத்தூர், கரும்புக்கடை, காந்திபார்க், ஆர்.எஸ்.புரம், செல்வபுரம், தெலுங்குபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.